விலை: 50.00 viber : 076 636 3378
பக்கங்கள் : 12

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 271 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 31 வெள்ளிக்கிழமை (16.09.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




தாயகம், புலம்பெயர் தேசங்களில்

## திலீபனின் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 35ஆவது நினைவு தின நிகழ்வுகள் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் உணர்வுபூர்வமாக ஆரம்பமானது.

(03ஆம் பக்கம் பார்க்க)

இம்மாத இறுதியில்

## ஐ.நாவில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர் 11

## 13ஆவது திருத்தத்தை அமுலாக்க இந்தியா அழுத்தம்

### விமல் வீரவன்ஸ கண்டனம்

(கொழும்பு)

மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் 12

எதிர்வரும் 19ஆம் திகதி

## பாடசாலைகளுக்கும் விடுமுறை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு எதிர்வரும் 19ஆம் திகதி விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச்சடங்குகள் எதிர்வரும் 19ஆம் திகதி இடம்பெறுவதை முன்னிட்டு, 11

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு

# சில மாதங்களில் தீர்வு வழங்கப்படும்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு சில மாதங்களில் தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமிழ்க் கட்சிகளுடன் விரைவில் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

(11ஆம் பக்கம் பார்க்க)



## எரிபொருள் கப்பலுக்கு செலுத்த பணமில்லை

### இலங்கைக் கடல் எல்லையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

இரு டீசல் கப்பல்களும் மசகு எண்ணெய் ஏற்றிவந்த மற்றொரு கப்பலுக்குமான பணம் செலுத்தப்படவில்லை என்பதால், மூன்று கப்பல்களும் இலங்கைக் கடல் எல்லைக்குள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளி 11

## புதிய தேர்தல் மூலமே மாற்றம் ஏற்பட வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(அம்பாறை)

புதிய தேர்தல் மூலமே மாற்றம் ஏற்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் 11

## இலங்கைக்கு மேலதிக நிதியுதவி வழங்கும் திட்டங்கள் இல்லை

### இந்திய அரச தரப்பில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு மேலதிகமாக நிதியுதவியை வழங்கும் திட்டங்கள் எதுவும் இல்லை என்று இந்திய அரசாங்கத் தரப்பு தெரி 11

உயர்தரப் பரீட்சை

## ஒத்திவைக்கப் படமாட்டாது

### கல்வி அமைச்சர்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையை ஒத்திவைப்பதற்கு எவ்வித தேவையும் ஏற்படவில்லை என கல்வி அமைச்சர் தெரிவித்துள் 11

அம்பாந்தோட்டை இராணுவ துறைமுகம் அல்ல

## வல்லரசுகளுக்கிடையிலான முரண்பாட்டில் இலங்கை தலையிடாது - ரணில்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகம் வெறும் வர்த்தக துறைமுகமே தவிர இராணுவ துறைமுகம் அல்ல என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்து சமுத்திரத்தில் வல்லரசுகளுக்கு இடையிலான முரண்பாடுகளில் இலங்கை தலை 11

சிறை வைத்தியசாலையில்

## உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட கைதி

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள 13 கைதிகள் கொழும்பு மெகசின் சிறைச்சாலையில் தொடர்ந்தும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 12 வயது சிறுமி துஷ்பிரயோகம் சாமியார் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

தனது தொலைபேசியில் இருக்கும் ஆபாச காட்சியை பார்க்க மறுத்தால், மந்திரத்தின் மூலம் கருவுற செய்ய போவதாக அச்சுறுத்தி, 12 வயதான சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சாமியாரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மந்திர சக்தி மூலம் நோய்களை குணமாக்கும் சிகிச்சைகளை வழங்கி வந்த சாமியார் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக குளியாப்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குளியாப்பிட்டிய பல்லேவல பிரதேசத்தில் சிகிச்சையளிக்கும் ஆலயம் ஒன்றை நடத்தி வந்த, விலபொல என்ற பிரதேசத்தை சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆபாச காட்சிகளை காட்டி இரண்டு வருடங்களாக சந்தேக நபர், சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி வந்துள்ளார்.

அத்துடன் சிறுமி தண்ணீர் எடுக்க சென்றிருந்த போது, சமையல் அறைக்கு பின்னால், வைத்து பலவந்தமாக துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ம-7)

# வேலணை பிரதேச சபையில் தியாகி திலீபனுக்கு அஞ்சலி



(குப்பிழான்)

வேலணைப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் தியாக தீபம் திலீபனை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்த வேண்டும் எனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

எனினும், வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் உள்ளிட்ட ஈபிடிபி கட்சியின் எட்டு உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகளின் தலா ஒரு உறுப்பினரும் திலீபனை நினைவு கூர்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்துச் சபையிலிருந்து வெளியேறினர்.

இந்நிலையில் சபை ஒத்தி வைக்கப்பட்ட பின்னர் முற்பகல்-10.50 மணியளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஆகியோர் இணைந்து மெழுகு திரியேற்றித் தியாகதீபம் திலீபனின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை உணர்பூர்வமாக அனுஷ்டித்தனர். (ம-7,18)

# தியாக தீபம் திலீபனுக்கு சிறீதரன் எம்.பி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)



தியாகி திலீபன் அவர்களின் 35 வது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகளின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களின் காரியாலயமான அறிவகத்தில் நடைபெற்றது.

ஈகச் சுடர்களை மாவீரன் கப்டன் ஒளி வேந்தன் அவர்களின் தாயார் ரஞ்சனிதேவி அவர்களும் மாவீரன் கப்டன் தீவண்ணன் அவர்களின் தாயாரும் மாவீரன் வீரவங்கை ஒளிஅமுதனின் தாயாரும் மாவீரன் வீர வேங்கை தமிழ் மைந்தனின் தாயாரும் ஏற்றினர்

மலர்மாலைகளை வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜா பச்சிலைப்பள்ளி பூநகரி ஆகியவற்றின் தவிசாளர்கள் கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் சிவமோகன் ஆகியோர் அணிவித்தனர்.

மலர் அஞ்சலிகளை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கட்சியின் செயற்பாட்டாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ம-7)

# திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு யாழில் இருந்து தலயாத்திரை

## திருவாசக முற்றோதலை ஒட்டி ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது.

இதனையொட்டி யாழ்ப்பாணத்தில் இருந்து சிவனடியார்கள் திருகோணமலைக்குத் தலயாத்திரை செல்லவுள்ளனர்.

இதற்கென விசேட வாகன வசதி செய்யப்பட்டுள்ளது.

பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரர் சிவன். ஆலயத்தில் இடம்பெறும் திருவாசக முற்றோதலில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் **077 786 6527** என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும்

இத் தலயாத்திரை நாளை சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் இணுவில் கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்தும் மாலை 6.00 மணியளவில் நல்லூர் துர்க்கா மணி மண்டப முன்றலில் இருந்தும் ஆரம்பமாகும் என்றும் தலயாத்திரை ஏற்பாட்டாளர் க.கு.க. சிவபாலன் அவர்கள் அறிவித்துள்ளார். (ம)

# யாழ். பல்கலைக்கழக இந்து பீடம் நடத்தும்

## ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இந்து கற்கைகளுக்கான பீடம் "உலகலாவிய கண்ணோட்டத்தில் இந்து நாகரீகம்" எனும் தொனிப் பொருளில் நடாத்தும் "Hindu Darshana" சர்வதேச ரீதியான ஆய்வு மாநாட்டு நிகழ்வானது இன்று வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கைலாசபிள்ளை கலையரங்கில் இடம்பெறவுள்ளது. (ம-7)

# பேருவளை கடலில் இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

பேருவளை - மாகல்கந்த கடலில் நீராடச்சென்ற மூன்று இளைஞர்களில் இருவர் அலையில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

நேற்று காலை 11.40 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த, 18 மற்றும் 19 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மற்றொரு நபர் தொடர்ந்தும் சிகிச்சைப்பெற்று வருகின்றார். (ம-7)


## வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

**2022 ஆம் ஆண்டிற்கான கிளைக்குழுத் தெரிவிற்கான அறிவித்தல்**

காலம் : 2022.09.18 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி

| இல | கிளையின் பெயர் | கிளை இல | தவிசாளர் பெயர் | கிளைக்குழுத் தெரிவு நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | புங்குடுதீவு மேற்கு | 83 | திரு. நாகலிங்கம் குமணதாஸ் | நண்பர்கள் விளையாட்டுக் கழகம் |
| 2 | புங்குடுதீவு கிழக்கு | 85 | திரு. கனகரட்ணம் வக்சன் | பாரதி சனசமூக நிலையம் |
| 3 | வேலணை கிழக்கு | 86 | திரு. கந்தையா கமலநாதன் | சங்க தலைமைக் காரியாலயம் |
| 4 | வேலணை மேற்கு | 88 | திரு. சின்னத்துரை குணாளன் | திருவள்ளுவர் சனசமூக நிலையம் |
| 5 | வேலணை தெற்கு | 89 | திரு. கனகரத்தினம் திசாகரன் | சங்க தலைமைக் காரியாலயம் |
| 6 | அல்லைப்பிட்டி | 90 | திரு. வேதநாயகம் பிரதீஸ்குமரன் | சென் பிலிப்ஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் |
| 7 | நயினாதீவு வடக்கு | 92B | திரு. ஜெயபாலன் சதீஸ் | சிறி அம்பிகா சனசமூக நிலையம் |
| 8 | நயினாதீவு தெற்கு | 92A | திரு. தங்கராசா கண்ணதாசன் | அண்ணா சனசமூக நிலையம் |

குறித்த கிளைகளிற்கான அறிவித்தல் கடிதம் குறித்த தவிசாளரினால் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ் அறிவித்தல் கிடைக்கப்பெறாதவர்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு கிளைக்குழுத் தெரிவுகளில் குறித்த நேரத்திற்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கூட்டுறவுச் சேவையிலுள்ள,**

**கௌரவ செயலாளர்,**

**வேலணை பனை தென்னை வள அபி.கூ.சங்கம் (வ.து)**

**வேலணை கிழக்கு,**

**1ஆம் வட்டாரம்.** (C-4918)


# பேராசிரியர் ராஜ் ராஜேஸ்வரன் ஆஸியில் காலமானார்

(சிட்னி)

பேராசிரியர் ராஜ் ராஜேஸ்வரன் மேற்கு அவுஸ்திரேலிய தலைநகரான பேர்த்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலமானார்.

யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அவுஸ்திரேலியத் தமிழர் பேரவையை(ATC) ஆரம்பித்ததுடன் அவுஸ்திரேலிய தமிழ்ச் சமூகத்திற்கும், தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கும் தன்னலமற்ற மற்றும் தாராளமான பங்களிப்பாளராகவும் இருந்தார்.

அமரர் கலாநிதி ராஜேஸ்வரன் ஸ்கொட்லாந்தின் எடின்பர்க்கில் படித்து சென்ட்ரி



பெற்றோலியம் லிமிட்டெட் நிறுவனத்தின் தலைவரானார்.

மேற்கு அவுஸ்திரேலிய கேர்டின்(Curtin) பல்கலைக்கழகத்தில் பெற்றோலியப் பொறியியல் துறையை ஆரம்பித்து வைத்த இவர் மேற்கு அவுஸ்திரேலிய பெற்றோலிய ஆராய்ச்சி மையத்தின் இயக்குநராகவும் இருந்தார். (ம-07,18,104)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் யாழில் நேற்று ஆரம்பமானது








**(யாழ்ப்பாணம்)**

**ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 35 ஆவது நினைவு தின நிகழ்வுகள் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது.**

யாழ்ப்பாணம், நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் தியாகி தீலிபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த நேரம் காலை 9.45 மணியளவில் அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமானது.

மாவீரர்களின் பெற்றோரால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

ஆகிய ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி 12 நாள்கள் உண்ணாவிரதம் இருந்து 1987 ஆம் ஆண்டு திலீபன் உயிர் நீத்தமை குறிப்பிடத்தக்கது. (4-33-104)

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்-2022

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள குருநகர் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகுட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி எதிர்வரும் 20 ஆம் திகதி மு.ப 9 மணிக்கு பழைய பூங்கா வீதி, மு.ப 11 மணிக்கு புதிய வீடமைப்பு திட்ட வீதி , பி.ப 2.30 மணிக்கு தொடர்மாடி குடியிருப்பு, 21 ஆம் திகதி மு.ப 9 மணிக்கு குருநகர் பொலிஸ் நிலையத்திற்கு அருகில், மு.ப 11 மணிக்கு பழைய பூங்கா சிறுவர் நீதிமன்றப் பகுதி , பி.ப 2.30 மணிக்கு திருநகர் மாணவர் படிப்பகம், 22 ஆம் திகதி மு.ப 9 மணிக்கு இராஜ சிங்கம் வீதி மாதாசிலையடி பகுதி, மு.ப 11 மணிக்கு சென் பற்றிக்ஸ் வீதி சேமக்காலை அருகில், பி.ப 2.30 மணிக்கு சென்பற்றிக்ஸ் வீதி கதிற்றல் வீதி சந்தி அருகில், 23 ஆம் திகதி மு.ப 9 மணிக்கு இராஜேந்திரா வீதி, மு.ப 11 மணிக்கு டேவிற் வீதி கடற்கரை வீதி சந்தி அருகில் , பி.ப 2.30 மணிக்கு மவுண்காமல் வீதி பாங்சால் வீதி, 26 ஆம் திகதி மு.ப 9 மணிக்கு சென்றோக்ஸ் சனசமூக நிலையம், மு.ப 11 மணிக்கு றெக்கிள மேசன் சனசமூக நிலையம், பி.ப 2.30 மணிக்கு புதிய கடற்கரை தண்ணீர் தாங்கி சந்தி, 27 ஆம் திகதி மு.ப 9 மணிக்கு தண்ணீர் தாங்கி 4 ஆம் 5 ஆம் குறுக்குத்தெரு, மு.ப 11 மணிக்கு சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை முன்பாக, பி.ப 2.30 மணிக்கு 2 ஆம் குறுக்குத்தெரு குருநகர், 28 ஆம் திகதி மு.ப 9 மணிக்கு ஐஸ்பிளான்ட் வீதி, மு.ப 11 மணிக்கு குருநகர் சனசமூக நிலையம் முன்பாக, பி.ப 2.30 மணிக்கு கடற்கரை வீதி 1 ஆம் குறுக்குத்தெரு சந்தி, 29 ஆம் திகதி மு.ப 9 மணிக்கு பாங்சால் வீதி 4 ஆம் குறுக்குத்தெரு சந்தி, மு.ப 11 மணிக்கு யாகப்பர் ஆலயத்திற்கு அருகாமை, பி.ப 2.30 மணிக்கு புதுமை மாதா ஆலயத்திற்கு அருகாமை, 30 ஆம் திகதி மு.ப 9 மணிக்கு ஓடக்கரை வீதி, மு.ப 10.30 மணிக்கு யூபிவி மகப்பேற்று நிலையம் முன்பாக, பி.ப 12 மணிக்கு குருநகர் சின்ன ஆஸ்பத்திரி முன்பாக, பி.ப 2.30 மணிக்கு செபஸ்ரியார் கோவில் அருகாமை ஆகிய இடங்களில் வைத்து ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பதை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறும் அத்துடன் ஒரு நாய்க்கான உரிமம் கட்டணமான 50 ரூபாய் அறவிடப்படும் எனவும் யாழ்.மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (4)

# பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான வழக்குகளில் காணப்படுகின்றன சான்றுப் பொருட்களான றைசைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கரவண்டிகள், கோடரிகள், வாச்சி, பேசின், அலவாங்கு, குறடு, வோட்டர்பம், துவிச்சக்கரவண்டி போக், கன்டர் வாகன முன்பகுதி பவர், சவள்கள், தொலைபேசி என்பன எதிர்வரும் 1 ஆம் திகதி காலை 10 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் சான்றுப்பொருட்களினை அனுமதியுடன் பார்வையிட முடியும்.

ஏல விற்பனையில் பங்கு பற்றுபவர்கள் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்கும் வகையிலான மூல ஆவணத்துடன் சமூகமளித்தல் வேண்டும்.

தற்போதைய covid-19 சூழ்நிலை காரணமாக சுகாதார அமைச்சினால் விடுவிக்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

ஏலத்தில் பொருளினைக் கொள்வனவு செய்பவர் உடனடியாக கொடுப்பனவினை பணமாக செலுத்தி ஏலப்பொருளினை அப்புறப்படுத்த வேண்டும். கொடுப்பனவுகள் பணமாக மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# போதைப்பொருளுடன் இருவர் நெல்லியடியில் கைது

(கரணவாய்)

நெல்லியடிப் பகுதியில் ஹெரோயின், கஞ்சா ஆகியவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சாவகச்சேரி கச்சாய் பகுதியைச் சேர்ந்த இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

குறித்த இருவரிடமும் இருந்து 300 மில்லிகிராம் ஹெரோயினும் 20 மில்லிகிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டன. மேலதிக விசாரனையை நெல்லியடி பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (4-60)

# தென்மராட்சியில் இவ்வருடம் இதுவரை 91 டெங்கு நோயாளர்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை எல்லைக்குட்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் 2022 ஆம் ஆண்டு இதுவரையான காலப் பகுதிக்குள் 91 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனை தரவுகள் தெரிவிக்கின்றன. அந்த வகையில் கடந்த ஏப்ரல் மாதம் 10 டெங்கு நோயாளர்களும் மே மாதம் 6 டெங்கு நோயாளர்களும் ஜூன் மாதம் 16 டெங்கு நோயாளர்களும் ஜூலை மாதம் 6 நோயாளர்களும் ஒகஸ்ட் மாதம் 9 நோயாளர்களும் செப்டம்பர் மாதம் இதுவரை 6 டெங்கு நோயாளர்களும் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (4-30)

# திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை மேற்கு பகுதியில் உள்ள இரும்பு ஒட்டுத் தொழிற்சாலை ஒன்றில் இருந்த பெறுமதியான பொருட்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு திருடப்பட்டிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது ஒட்டுத் தொழிற்சாலையில் காணப்பட்ட மூன்று இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருட்டுத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபது-20 உலகக்கிண்ணம் மே.தீவுகள் அணி அறிவிப்பு



இருபது-20 உலகக்கிண்ணத் தொடரில் விளையாடவுள்ள மேற்கிந்திய தீவுகள் அணியின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

15 பேர் கொண்ட நிக்கோலஸ் பூரான் தலைமையிலான அணியில், இடது கை ஆரம்ப துடுப்பாட்ட வீரரான எவின் லூயிஸ் இடம்பிடித்துள்ளார்.

அணியில் வலது கை சுழற்பந்து வீச்சு சகலதுறை வீரரான யானிக் கரியா மற்றும் இடது கை துடுப்பாட்ட சகலதுறை வீரரான ரேமன் ரெய்ஃபர் ஆகியோர் உலகக்கிண்ணத் தொடரில் அறிமுகமாகின்றனர்.

இருப்பினும், அனுபவமிக்க இருபது-20 நட்சத்திரங்களான ஆண்ட்ரே ரசல் மற்றும் சுனில் நரைனுக்கு இடமில்லை.

நிக்கோலஸ் பூரான் தலைமையிலான அணியில், ரோவ்மேன் பவல், எவின் லூயிஸ், பிராண்டன் கிங், கைல் மேயர்ஸ், ஒடியன் ஸ்மித், ஜோன்சன் சார்லஸ், ஷிம்ரோன் ஹெட்மியர், ஜேசன் ஹோல்டர், ரேமன் ரெய்ஃபர், ஓபேட் மெக்காய், அல்ஸாரி ஜோசப், அகீல் ஹொசைன், ஷெல்டன் கொட்ரெல், யானிக் கரியா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (4)

## பயிற்சியாளர் பதவியில் இருந்து
# மஹேல விலகல்



மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவியில் இருந்து இலங்கை அணியின் முன்னாள் வீரர் மஹேல ஜெயவர்தன விலகியுள்ளார்.

இந்நிலையில் மும்பை இந்தியன்ஸிற்கு சொந்தமான மூன்று அணிகளின் செயற்திறன் மேற்பார்வையாளர் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை மூன்று அணிகளின் கிரிக்கெட் மேம்பாட்டுக்கான பயிற்சியாளராக சஹீர் ஹான் நியமிக்கப்பட்டுள்ளார். (4)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 300 | 300 | 280 | 320 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 280 | 280 |
| தக்காளி | 200 | 200 | 200 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 240 |
| கோவா | 450 | 400 | 400 | 450 |
| கரட் | 350 | 380 | 400 | 450 |
| பூசணி | 130 | 130 | 150 | 200 |
| புடோல் | 180 | 180 | 120 | 160 |
| வாழைக்காய் | 220 | 220 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 550 | 500 | 650 | 800 |
| வெண்டிக்காய் | 180 | 240 | 100 | 240 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 300 |
| பயற்றங்காய் | 300 | 300 | 250 | 150 |
| லீக்ஸ் | 300 | 250 | 300 | 400 |
| பீற்றூட் | 180 | 160 | 180 | 300 |
| கறிமிளகாய் | 600 | 650 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 700 | 800 |
| போஞ்சி | 600 | 500 | 700 | 700 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | — | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 400 | 300 | 350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-90 | 60-80 |
| இராசவள்ளி | 260 | 250 | 200 | 300 |
| வெங்காயப்பூ | — | 450 | 340 | 320 |
| முள்ளங்கி | 180 | 200 | 120 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 30 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 120 | 80 | 100 | 150 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2700

### செறின்

நிறைய மொழிகள்
பேசத் தெரிவது
ஒரு கலை தான்... ஆனால்,
அமைதியாக இருக்க வேண்டிய
இடத்தில் பேசாமல் இருப்பது
எல்லா மொழிகளையும்
விட சிறந்த கலை...


### வெனிகின்

கல்யாணம் மேக்கப் போட
60,000 ரூபாயாம்...



இந்த காசுக்கு ஒரு வீட்டுக்கே
பெயின்ட் அடிக்கலாமே!

### நிசாந்தினி




### சாம்

பெற்ற தாய் இல்லை எனில்
பிறந்த வீட்டுக்கு



விருந்தாளியாக கூட செல்ல
முடியாது பெண்களால்!

### பெனிற்றா

நல்லவனாய்
இரு, ஆனால்
அதை
வெளிகாட்டிக்
கொள்ளாதே
நல்லவனை உலகம்
மதிப்பதில்லை

### கஜேந்திரா



முடிந்து போன வாழ்க்கை திரும்பி
வரப்போவதில்லை ஆகவே, நிகழ்காலத்தின்
சரியான பாதையில் எதிர்காலத்தை
நோக்கி பயணியுங்கள்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவைகளை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிரீன் லேயர் (Green Layer) அமைப்பினால் பசுமைப் புரவலர் விழா கடந்த 4 ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெற்றது. கிரின் லேயர் அமைப்பின் நிறுவுநர் சசிகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அசர அதிபர் க.மகேசன், மேலதிக அரச அதிபர் ம.பிரதீபன் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் மு.இராதகிருஷ்ணன், பேராசிரியர் சண்முகலிங்கம், பேராசிரியர் எஸ்.கிருஸ்ணராஜா, பேராசிரியர் தி.வேல்நம்பி மற்றும் பிரதேச செயலாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.


# 2023 மார்ச் மாதத்திற்குள் தேர்தல் நடைபெறும்

## தேர்தல்கள் ஆணைக்குழு உறுதி

(கொழும்பு)

எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்தியே தீருவோம் என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஏற்கனவே ஓராண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



உள்ளூராட்சி மன்ற கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு பின்னர் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் ஆணைக் குழுவுக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து அடுத்த 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# நிலக்கரி கையிருப்பு இன்மையால் நீண்டநேரம் மின்வெட்டு ஏற்படலாம்

## மின்சாரசபை எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் காலங்களில் நீண்ட நேர மின்வெட்டு ஏற்படும் என இலங்கை மின்சாரசபையின் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

நிதிப் பற்றாக்குறை காரணமாக நுரைச்சோலை லக் விஜய நிலக்கரி அனல்மின் நிலையத்திற்கு நிலக்கரியை கொள்வனவு செய்ய முடியாத காரணத்தினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (நி)

# உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்; மீளாய்வுக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறு பேறுகளை மீளாய்வு செய்வ தற்கான விண்ணப்பங்களை ஒன்லைன் ஊடாக கோருவத ற்கு பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமைய நேற்று முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# கண்ணீர் அஞ்சலி

அமரர். பரமநாதன் சிசிலியம்மா

(செல்வராணி)



எமது பாடசாலை ஆசிரியை

**திருமதி. டோறா பான்சி கல்கி**

அவர்களின் பாசமிகு மாமியார் அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்

யா/ஆணைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்

(12787)

# இராசிபலன்

16.09.2022
ஆவணி 31, வெள்ளிக்கிழமை
சஷ்டி பிற்பகல் 2.55 மணிவரை

கார்த்திகை பிற்பகல் 1.17 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை

கபில சஷ்டி
சந்திராஷ்டமம் - சித்திரை, சுவாதி

வளவன்




காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.




வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.




ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.




கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வீடு கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.




பெற்றோர் மீது பிரியம் கூடும், வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சுப தகவல்கள் உங்களை நாடி வரலாம், போசன சுகமுண்டு.




அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.




வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.




வியாபார விரோதம் விலகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சி கைகூடும்.




பகை விலகி பாசம் கூடும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

எந்த நற்செயலையும் திறம்பட செய் உன் திறமைகளைத் தூங்க விடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### கீர்த்தி சிம்மன் கதை

(நேற்றைய தொடர்ச்சி)


அதைப் படித்த இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பிறகு "இதை நன்கு பத்திரப்படுத்தித்தான் வைத்திருக்கிறார்கள். நாம் சிரமப்பட்டது வீணாகி விடவில்லை. இத்தகட்டில் எழுதியுள்ளதைக் கண்டுபிடித்து விடலாம்" என்றாள் சக்தி சேனை.

கீர்த்திவர்மனும் "ஓ! தாராளமாகக் கண்டு பிடித்து விடலாம். அது மிக எளிதான காரியமே. அதற்காக அதிகம் சிரமப்பட வேண்டியதும் இல்லை. சற்று மூளையை உபயோகித்தால் போதும்" என்றான் புன்னகை புரிந்தவாறே.

கீர்த்திசிம்மன் புன்னகை புரிந்தவாறே அந்த தகட்டை வெள்ளிப் பெட்டியில் போட்டுப் பத்திரமாக வைத்துக் கொண்டான். பிறகு பித்தளைப் பெட்டியை இரும்புப் பெட்டிக்குள் வைத்தான். இரும்புப் பெட்டியை குழிக்குள் இறக்கி விட்டு குழியை மண்ணால் நிரப்பினான்.

அப்போது இரவு வந்தது. பௌர்ணமிக்கு மறுநாள் ஆனதால் சற்று நேரத்தில் நிலா ஒளி எங்கும் வீசியது. கீர்த்திசிம்மனும் சக்தி சேனையும் வில்வ மரத்தடியிலிருந்து வந்து கோவிலின் முன்புறத்தை அடைந்தார்கள். கீர்த்திசிம்மன் "சரி நாம் தேவியை வணங்கிவிட்டு இருங்கிருந்து செல்வோம்"



எனவே சக்திசேனையும் அவனோடு சேர்ந்து தேவயின் விக்கிரகத்தின் முன் நின்றாள்.

இருவரும் தேவியின் விக்கிரகத்தை வணங்கி "தாயே! மகாசக்தி! உன் தயவால் இதுவரை எல்லாமே நல்லவிதமாக நடந்துள்ளது. எங்களுக்கு அருள்புரிந்து எங்களை உயர்த்தி விட்டாய். உன்னை தினமும் பூசித்து வரும் பாக்கியத்தையும் எங்களுக்கு அளி" என்று வேண்டினார்கள்.

அவர்கள் அவ்வாறு கூறி முடித்ததும் ஆலயம் முழுவதும் திடீரென் ஒளிவெள்ளத்தில் மூழ்க்கியது.

அந்த ஒளியில் தேவியின் விக்கிரகம் பன்மடங்கு ஒளியோடு விளங்கியது. அதன் முகத்தின் புன்னகை அருள் சுரப்பதாக இருந்தது.

கீர்த்திசிம்மனும் சக்திசேனையும் அந்த விக்கிரகத்தின் முன் விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார்கள்.

(தொடரும்)

## சிலப்பதிகாரம்

### முன் கதை




அப்போது ஊனமுற்ற ஒரு முதியவர் தானம் பெற வந்தார். ஆனால் அவரை ஒரு மத யானை துதிக்கையில் வளைத்துப் பிடித்தது.

உடனே நீ பாய்ந்து சென்று அவரை யானையின் பிடியிலிருந்து காப்பாற்றினாய். யானையையும் அடக்கினாய். ஆனால் நீ அந்த யானையைக் கொல்லவில்லை. காரணம் உயிர்கள் மீது கொண்ட அன்புதான்!

ஒரு பிள்ளையைப் பாம்பு கொத்த வந்தது. அதைப் பார்த்த ஒரு கீரி அதன்மீது பாய்ந்து கடித்துக் குதறியது. பாம்பைக் கொன்று பிள்ளையைக் காத்தது.

ஆனால் இந்தக் கடுமையான சண்டையால் பிள்ளை மேலும் கீரி மேலும் ரத்தம் படிந்திருந்து இதைப் பார்த்த பிள்ளையின் தாய் தன்னுடைய குழந்தையைக் கீரி கொன்று விட்டதாக நினைத்தாள். ஆவேசப்பட்டு அந்தக் கீரியைக் கொன்றுவிட்டாள்.

அதன்பிறகு தான் அவள் தன்னுடைய பிள்ளை உயிருடன் இருப்பதைப் பார்த்தாள். மிகவும் வருந்தினாள். அவசரப்பட்டு முடிவெடுத்துக் கீரியைக் கொன்ற அந்த பெண்ணை அவளுடைய கணவன் பாவி என்று ஒதுக்விட்டுப் பிரிந்து போனான். அந்தப் பாவத்திலிருந்து விடுபடுவதற்கு அந்தப் பெண் தர்மங்கள் செய்ய விரும்பினாள்.

அதற்கு நீ உறுதுணையாக இருந்தாய் மீண்டும் அவர்களை இணைத்து வைத்தாய்.

இன்னொருவன் [illegible]க்கு ஆசைப்பட்டுப் பத்தினி ஒருத்தி மீது பழி சொன்னான். இந்தப் பாவத்தைச் செய்த அவனை பூதம் பிடித்துக் கொண்டது.

இதைக் கண்ட அவன் தாய் மிகவும் துன்பப் பட்டாள். அதைப் பார்த்த நீ, அந்த பூதத்திடம் உன் உயிரை எடுத்துக்கொண்டு அவனை விட்டுவிடும் படி கேட்டுக் கொண்டாய்.

ஆக, கோவலனே இந்தப் பிறவியில் நீ செய்த எல்லாமே நல்வினைகள்தான். இருந்தாலும் நிலை கெட்டு வருந்தி கொடிபோன்ற மனைவியை அழைத்துக் கொண்டு ஊரைவிட்டு நீ வர நேரிட்டது.

அதற்குக் காரணம் முன்வினைப் பயன் தான் என்பதை நான் அறிவேன்.

இதைக் கேட்ட கோவலன் சிறிது நிம்மதி அடைந்தான். ஆனாலும் அவன் மனம் ஆறவில்லை. அதற்குக் காரணம் அவன் அதிகாலையில் கண்ட ஒரு கொடுமையான கனவுதான்.

"அப்படி என்ன கனவு கண்டாய் கோவலனே?"

'நான் எருமைமேல் போகிறேன். கண்ணகி பெரும் துயருக்கு ஆளாகிறாள் என்றான் கோவலன். விடியலில் வரும் கனவுகள் நடக்கபோவதை அறிவுறுத்தும் எச்சரிக்கைகள் என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். என்று பயத்தோடு சொன்னான்.

கோவலன் கண்ட கனவு சும்மா ஒதுக்கி விடக்கூடியது அல்ல என்பது மாடலனுக்கும் கவுந்தி அடிகளுக்கும் புரிந்தது. என்றாலும் அதைப்பற்றிப் பேசாமல் வேறு விடயத்துக்குத் தாவினார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 77

உக்ரைனின் டான்பாஸ் பகுதியில், ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளின் அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறை காரணமாக 20% வாக்குச் சீட்டு நிலையங்கள் மட்டுமே திறந்திருந்தன. திட்டமிடப்பட்ட 2,430 வாக்குச் சீட்டு நிலையங்களில் (டான்பாஸில்), 426 மட்டுமே வாக்குப்பதிவுக்காகத் திறந்திருந்தன. பிரிவினைவாதிகள் தோனேஸ்க் மக்கள் குடியரசு மற்றும் லுகான்ஸ்க் மக்கள் குடியரசு என்று தங்களைத் தாங்களே அறிவித்துக் கொண்டனர். அவர்கள் டான்பாஸின் பெரும்பகுதியைக் கட்டுப்படுத்தி, தங்கள் பிரதேசத்தில் தேர்தல்களை சீர்குலைக்க முடிந்த அனைத்தையும் செய்தனர்.

பெட்ரோ போரோஷென்கோ ஜனாதிபதி பதவியை வென்று 2019 வரை ஜனாதிபதி பதவியை வகித்தார். 2019 ஜனாதிபதித் தேர்தலில் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியிடம் தோற்றார். மத்திய தேர்தல் ஆணையத்தின் கூற்றுப் படி, அங்குள்ள மாவட்ட தேர்தல் கமிஷன் உறுப்பினர்கள் அவர்களின் சொந்த பாதுகாப்பு மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு பிரிவினைவாதிகளிடமிருந்து அச்சுறுத்தல்களைப் பெற்றனர். உக்ரைனின் சுமார் 36 மில்லியன் தகுதிபெற்ற வாக்காளர்களில் சுமார் 5.6% வாக்காளர்கள் உள்ள இரண்டு பிராந்தியங்களில் (மாநிலங்கள்) உள்ள இரண்டு மில்லியன் மக்கள், அங்கு நிலைமையை மேம்படுத்தவில்லை என்றால், அவர்களது வாக்களிக்கும் உரிமையை இழக்க நேரிடும் என்று CEC எச்சரித்தது.

**மே 22 அன்று, தோனேஸ்க் மற்றும் லுகான்ஸ்க் மாநிலங்களில் இருந்த முப்பத்தி நான்கு தேர்தல் மாவட்டங்களில் பதினெட்டுகளின் பணி, தோனேஸ்க் மக்கள் குடியரசு மற்றும் லுகான்ஸ்க் மக்கள் குடியரசின் பிரதி நிதிகளால் (பிரிவினைவாதி களால்) முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிறுத்தப்பட்டது.**

மே 23 வாக்கில், இந்த எண்ணிக்கை முப்பத்து நான்கில் இருபதாக அதிகரித்தது.

உக்ரைனின் வாக்காளர்கள் குழு மே 23 அன்று, "நடக்கும் பயங்கரவாத செயல்கள் மற்றும் ஆயுதமேந்திய கிளர்ச்சி" காரணமாக, உக்ரைனிய மக்களில் 10% வாக்களிக்க முடியாது போகும் என்று கணித்திருந்தது. அதே நாளில், லுகான்ஸ்க் மக்கள் குடியரசின் தலைவர் குடிமக்கள் வாக்களிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தினார், உக்ரைனிய இராணுவத்தால் குண்டு வெடிப்புகள் நடத்தப்படலாம் என்று எச்சரித்தார்.

21 வேட்பாளர்கள் தேர்தலில் பங்கேற்றனர். அவர்களில் ஏழு பேர் அரசியல் கட்சிகளால் பரிந்துரைக்கப்பட்டவர்கள். 15 பேர் சுயமாக (சுயேட்சையாக) பரிந்துரைக்கப்பட்டவர்கள். ஏப்ரல் 7, 2014 இற்கு முன், நான்கு பிராந்தியங்களின் கட்சி உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிட வேட்புமனுக்கள் தாக்கல் செய்தனர்.

ஆனால் 7 ஏப்ரல் 2014 அன்று கட்சியின் அரசியல் சபை ஜனாதிபதி வேட்பாளர்களான செர்ஹி திஹிப்கோ ஒலே தசறுவ் மற்றும் யூரி பொய்கோ ஆகியோரை கட்சியில் இருந்து நீக்கியது. பிராந்தியங்களின் கட்சி விக்டர் யானுகோவிசின் கட்சியாகும். வேட்பாளர் பதிவுக்கான சில விண்ணப்பங்களை மத்திய தேர்தல் ஆணையம் ஆரம்பத்திலேயே நிராகரித்தது.

உக்ரைனின் மத்திய தேர்தல் ஆணையம் 543 சர்வதேச அதிகாரப்பூர்வ தேர்தல் கண்காணிப்பாளர்களை 2 மே 2014 அன்று பதிவு செய்தது. மே 23 அன்று (தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு) இந்த எண்ணிக்கை 3,607 ஆக உயர்ந்தது.

ஆரம்பத்தில் ரஷ்யா தேர்தலை நடத்துவதை எதிர்த்தது. ஏனெனில் ரஷ்ய அரசாங்கம் அப்போதைய ஜனாதிபதி விக்டர் யானுகோவிச்சை நீக்கியது சட்டவிரோதமானது என்றும் மற்றும் அவருக்காக தற்காலிகமாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆட்சி "சட்டவிரோத ஆட்சி" என்று கருதியது. ஆனால் 7 மே 2014 அன்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தேர்தல் "சரியான திசையில்" ஒரு படியாக இருக்கும் என்று நம்புவதாக கூறினார், ஆனால் "அனைத்து குடிமக்களின்" உரிமைகளும் பாதுகாக்கப்படாவிட்டால் வாக்கு எதையும் தீர்மானிக்காது என்றும் கூறினார்.

23 மே 2014 அன்று செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சர்வதேச பொருளாதார மன்றத்தில், உக்ரைனில் நடந்த தேர்தல்களின் முடிவை ரஷ்யா மதிக்கும் என்றும், ஜனாதிபதியாக யார் வெற்றி பெற்றாலும் அவர்களுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாகவும் புடின் அறிவித்ததன் மூலம் ரஷ்யாவின் ஆரம்ப நிலைப்பாட்டில் இருந்து விலகியதை இது காட்டுகிறது.

(தொடரும்)

# கார் விபத்தில் சிக்கினார் உக்ரைன் ஜனாதிபதி

(கீவ்)

உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி பயணம் செய்த கார் விபத்தில் சிக்கியது.



தலைநகர் கீவ்வில் இடம் பெற்ற இந்த விபத்தில் ஜனாதிபதி ஜெலென்ஸ்கிக்கு பெரிய அளவில் காயம் ஏற்படவில்லை என அவரது செய்தித் தொடர்பாளர் செர்ஹி நைகிபோரோவ் நேற்று வியாழக்கிழமை அதிகாலை பேஸ்புக் பதிவில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி பயணம் செய்த கார் மற்றொரு காருடன் மோதி இந்த விபத்து இடம் பெற்றது. விபத்தைத் தொடர்ந்து மருத்துவர்களால் ஜனாதிபதி பரிசோதிக்கப்பட்டார். எனினும் ஜனாதிபதிக்கு பெரிய பாதிப்புகள் எதுவும் இல்லை. இந்த விபத்து குறித்து விசாரணைகள் முன் னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# முடிவுக்கு வருகிறது கொரோனா வாய்ப்பை நாம் பயன்படுத்த வேண்டும்

## உலக சுகாதார அமைப்பு தகவல்

(ஜெனிவா)

உலகம் முழுவதும் கொரோனாத் தொற்றால் ஏற்படும் மரணங்கள் குறைந்து வருகின்றன.

கடந்த 2019 ஆம் ஆண்டு சீனாவின் வுகான் நகரில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி இலட்சக்கணக்கான மக்களை பலி வாங்கி விட்டது. ஏராளமானோர் இந்த நோயால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இது தொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் தெரிவிக்கையில், உலகம் முழுவதும் கொரோனாத் தொற்றால் ஏற்படும் மரணங்கள் குறைந்து வருகின்றன.

2020 மார்ச் மாதத்தை விட தற்போது பலி எண்ணிக்கை வெகுவாக குறைந்து விட்டது. கொரோனா இன்னும் முற்றிலும் முடியவில்லை.

ஆனால் அதன் முடிவு நமக்கு எட்டும் தூரத்தில் தான் உள்ளது. இந்த வாய்ப்பை நாம் நன்றாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இல்லையென்றால் அதிக வைரஸ் மாறுபாடுகள், இறப்புகள் அதிகரிப்பதற்கான நிலை ஏற்படும் அபாயம் உள்ளது.

அதனால் நாம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (நி)

# இந்திய விமானத்தில் தீப்பரவல் 145 பயணிகளும் பத்திரமாக மீட்பு

(மஸ்கட்)

ஓமன் தலைநகர் மஸ்கட்டிலிருந்து கொச்சிக்கு புறப்படவிருந்த ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானத்தில் இன்ஜினிலிருந்து புகை வருவது கண்டறியப்பட்டது. இதையடுத்து, அதில் பயணம் செய்யவிருந்த 145 பயணிகளும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

மீட்பு பணிகளை விரைவாக மேற்கொண்டதால் தீவிபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. மாற்று விமானத்தில் பயணிகளை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

விபத்துக்கான காரணம் குறித்த விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்தகவல் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை பொது இயக்குநரும் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அரசின் கட்டுப்பாட்டில் இருந்த ஏர் இந்தியா நிறுவனத்தை டாடா குழுமம் அண்மையில் வாங்கியது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கையடக்கத் தொலைபேசிகளின் பாவனையால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி பாதிப்பு

## மருத்துவ ஆலோசகர் வருணகுணதிலக எச்சரிக்கை

**(கொழும்பு)**

**கையடக்கத் தொலைபேசி பாவனையினால் 12 வயதுக்குப்பட்ட குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கும் பார்வைக்கும் பாதிப்பு ஏற்படுமென மருத்துவ ஆலோசகர் வருண குணதிலக்க எச்சரித்துள்ளார்.**

இதன்படி,12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஒரு நாளைக்கு 2 மணி நேரம் மட்டுமே கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1-12 வயதிற்குட்பட்ட குழந்தைகள் கையடக்கத் தொலைபேசிகளுக்கு அடிமையாவதால் கவனம் செலுத்துவதில் சிக்கல்கள், எரிச்சல், ஆக்ரோஷமான நடத்தை மற்றும் தனிமைப்படுத்தப்படுதல் ஆகியவை ஏற்படுகின்றன.

அதே சமயம் சரியான முடிவுகளை எடுக்கும் திறனையும் பாதிக்கிறது.


இருப்பினும், குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் கணினி அல்லது மடிக்கணினி பயன்படுத்தும் திரைக்கும் கண்களுக்கும் இடையே 18 அங்குல இடைவெளியை பராமரிப்பது கணினியைப் பயன்படுத்த மருத்துவ ரீதியாக பரிந்துரைக்கப்பட்ட முறையாகக் கருதப்படுகிறது.

எனவே, குழந்தைகள் தங்கள் படிப்புக்கு கணினி அல்லது அதேபோன்ற அகலமான திரையைப் பயன்படுத்த அறிவுறுத்தப்படுகிறது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கையடக்கத் தொலைபேசிகளின் பாவனை சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் இருவருக்கும் கடுமையான உடல் நலப் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகக் கூறிய மருத்துவர் ஆரோக்கியமான உடலைப் பேணுவதற்கு குழந்தைகள், பெரியவர்கள் இரவில் ஏழு மணி நேரம் தூங்குவது அவசியம் என அவர் தெரிவித்தார். (நி)

# போரில் இறந்தவர்களை நினைவு கூர தடையில்லை

## பிரதமர் உறுதி



(கொழும்பு)

போரில் இறந்தவர்கள் எவராக இருந்தாலும் அவர்களின் உறவினர்கள் அல்லது அவர்கள் சார்ந்த இனத்தவர்கள் அவர்களை அமைதியாக நினைவேந்த முடியும். இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது,

கடந்த காலங்களில் ஒவ்வொரு வருடமும் நினைவேந்தல் நிகழ்வுகள் வரும் போது இன ரீதியான, மொழி ரீதியான, மத ரீதியான கருத்து மோதல்கள் வெடிக்கின்றன. அந்த நிலைமை இனியும் தொடரக்கூடாது என்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாகவுள்ளார்.

நினைவேந்தல்களை இறந்தவர்களின் உறவினர்கள் அல்லது அவர்கள் சார்ந்த இனத்தவர்கள் அமைதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். அந்த நிகழ்வுகள் அரசியல் நிகழ்ச்சி நிரல் உள்ளதாகவோ அல்லது இன ரீதியான கிளர்ச்சியைத் தூண்டுபவையாகவோ இருக்கக் கூடாது.

அதேவேளை, தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் கொடிகளைப் பயன்படுத்தியோ அல்லது அந்த அமைப்புக்களுக்கு புகழாரம் சூட்டியோ நினைவேந்தல் நிகழ்வுகளைக் கடைப்பிடிக்க முடியாது. அவற்றை மீறினால் சட்டங்களுக்கமைவாகவே நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என அவர் தெரிவித்தார். (நி)

# பல்கலை மாணவர்களுக்கு பகுதிநேர வேலைவாய்ப்பு வழங்க தீர்மானம்

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றில் புதிய அத்தியாயத்தை பதிவு செய்யும் வகையில், .பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு 13 மணிநேர பகுதி நேர வேலைவாய்ப்பை வழங்க பல்கலைக்கழக ஆளும் அதிகார சபை தீர்மானித்துள்ளது.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகமொன்றில் முதன்முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டத்தின் கீழ், ஒரு மாணவர் ஒரு மணித்தியால வேலைக்காக 350 ரூபாய் பெற்றுக்கொள்வார்.

பல்கலைக்கழகத்தில் கல்வி சாரா சேவைகளை வழங்குவதற்கும் இணையம் மூலம் அறிவுப் பரிமாற்றம் செய்வதற்கும் தற்காலிக வேலைவாய்ப்பு நியமனம் வழங்கப்படும் என துணைவேந்தர் தெரிவித்தார்.

இந்த புதிய திட்டத்தில் மாணவர்களிடையே மிகுந்த ஆர்வம் ஏற்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே சுமார் 170 மாணவர்கள் இதற்கு விண்ணப்பித்துள்ளதாகவும் அவர்களுக்கு ஒக்டோபர் 1 ஆம் திகதி நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# சத்திர சிகிச்சைகளை பிற்போடும் மருத்துவமனைகள் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் அவசர சத்திரசிகிச்சைகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை சேமிப்பதற்காக வழமையான சத்திரகிசிச்சைகளை ஒத்திவைக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே இதனைத் தெரிவித்துள்ளார்.

எஞ்சியிருக்கின்ற மருந்துகளையும் மருத்துவ உபகரணங்களையும் இருதய சத்திரகிசிச்சை போன்ற உயிர்காக்கும் சத்திரகிசிச்சைகளுக்காக பத்திரப்படுத்த வேண்டியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆறு மாதங்களிற்கு முன்னரே இந்த வழமையான சத்திரகிசிச்சைகளுக்கு மருத்துவர்கள் அனுமதி வழங்கி விட்டனர், உரியநேரத்தில் சத்திரகிசிச்சை இடம்பெறும் என்ற நம்பிக்கையுடன் நோயாளிகள் உள்ளனர்.

எனினும் தற்போதைய மருந்து, மருத்துவ உபகரணங்கள் பற்றாக்குறை காரணமாக நோயாளிகளுக்கு சத்திரகிசிச்சைகளை மேற்கொள்ளாமல் மருத்துவமனைகள் திருப்பி அனுப்பிவிட்டன.

வரவு செலவு திட்டத்தில் புற்று நோய் மருந்துகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த மருந்துகள் இறக்குமதி செய்யப்படுமா என்பது தெரியாது என அவர் தெரிவித்துள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா:சூரி.செவ் 3 இல்<br>உயரம்: 170 cm<br>தகைமை/தொழில்:A/L, தனியார் தொழில்-குவைத்)<br>எதிர்பார்ப்பு: பதிவுத்திருமணத்துடன் விவாகரத்துப் பெற்றவர்<br>தொ.இ: B/12945 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா:20 சூரி 6 செவ் 10 இல்<br>தகைமை/தொழில்: BSc (Hons)Software Engineer<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/12961 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம் 3<br>கி.பா: சூரி 9 செவ் 12 இல்<br>உயரம்: 168 cm<br>தகைமை/தொழில் BSc,Msc அவுஸ்திரேலியா<br>எதிர்பார்ப்பு:ஆங்கில அறிவுள்ள பெண்<br>தொ.இ: B/12946 | பிறப்பு:1978 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி 2<br>கி.பா: சூரி 9 செவ் 10 இல்<br>உயரம்:4'10<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர் உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/12964 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 14 ¾ சூரி 6 செவ் 10 இல்<br>உயரம்: 163 cm<br>தகைமை/தொழில்:A/L வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12947 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி 1<br>உயரம் : 5'4"<br>கி.பா: சூரி 1 செவ் 10 இல்<br>தகைமை/தொழில்: BSc in Nursing தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி யாழ்.பல்கலைகழகத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்<br>தொ.இ:G/12966 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம் : பூரம் 2<br>கி.பா: 10 சூரி.செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/L சாரதி தனியார் நிறுவன மேற்பார்வையாளர்<br>எதிர்பார்ப்பு :படித்த சிறுதொழில் புரியும் பெண்<br>தொ.இ: B/12950 | பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>கி.பா: 22 சூரி 12 செவ் 2 இல்<br>உயரம்:5'1"<br>தகைமை/தொழில் :Bachelor of information and Communication Technology அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/12969 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்காக காத்திருக்காதே!
உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்!
– அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தொழில் முயற்சியாண்மைக்கு வழிகாட்டல் அவசியம்

நாடு மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ள இந்நேரத்தில், அதிலிருந்து மீண்டெழுவது எங்ஙனம் என்பது பற்றிய சிந்தனையோட்டம் சிங்கள மற்றும் முஸ்லிம் புத்திஜீவிகளிடம் கடுமையாக ஏற்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக அரச பணிபுரியும் சிங்கள இளைஞர்கள் பலர் வேலைவாய்ப்பைக் கருத்திற் கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இதுதவிர, எத்தகைய வேலைவாய்ப்புக்களில் ஈடுபட முடியும் என்ற ஆலோசனைகளிலும் வழிகாட்டல்களிலும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக பேராதனைப் பல்கலைக்கழகம் அங்கு பட்டப்படிப்பை மேற்கொள்கின்ற மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்திலேயே வேலைவாய்ப்பை வழங்கி வருகிறது.

ஆக, சிங்களப் புத்திஜீவிகளும் முஸ்லிம் கல்வியாளர்களும் தத்தம் இனம் சார்ந்தவர்களின் பொருளாதார நலன்களில் அதீத கவனம் செலுத்தி வருகின்றனர்.

ஆனால் தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை அதுசார்ந்த எந்த முயற்சிகளும் இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

மாறாக, எமது இளைஞர்களும் மாணவர்களும் கையடக்கத் தொலைபேசிக்குள் மூழ்கிக் கிடக்கின்றனர்.

நாட்டில் – உலகில் என்ன நடக்கிறது என்பதைக் கூட அறியாதவர்களாக அவர்கள் இருப்பது வேதனையிலும் வேதனை.

ஆம், இலங்கையின் பொருளாதார நிலைமை மென்மேலும் மோசமடையும் என்று எதிர்வுகூறப்படுகின்ற இந்த நேரத்தில், ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 350 ரூபாயைக் கடந்துவிட்ட நிலையில், சாதாரண மக்களின் நாளாந்த சீவனோபாயம் என்பது மிகப்பெரிய சவாலைச் சந்திக்கப் போகிறது.

ஒருவேளை உணவுக்கு என்ன செய்வது என்று ஏங்கக்கூடிய இந்த நேரத்தில், நம் இளைஞர்களும் மாணவர்களும் தத்தம் குடும்பப் பொருளாதார நிலையை மேம்படுத்த தொழில் முயற்சிகளில் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

அதிலும் குறிப்பாக, பட்டப்படிப்பு மற்றும் பாடசாலைக்கு வெளியிலுள்ள கல்விசார் அமைப்புகளில் தொழிற்கல்வியை மேற்கொள்பவர்கள், பகுதிநேர தொழில் முயற்சியில் ஈடுபடுவதை ஊக்குவிப்பது மிகவும் அவசியமானதாகும்.

தவிர, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் அதன் பொருட்டு இலவசக் கருத்தரங்குகள் பயிற்சிப் பட்டறைகளை துறைசார்ந்த புலமையாளர்கள் நடத்தி எமது இளைஞர்களை வழிப்படுத்த வேண்டும்.

இதை நாம் செய்யாத விடத்து, தமிழர்களின் எதிர்காலப் பொருளாதாரத்தை தக்க வைக்க முடியாமல் போவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

## எலிசபெத் மகாராணிக்கு கொழும்பில் அஞ்சலி

மறைந்த இரண்டாம் எலிசபெத் மகாராணிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இலங்கையின் அரசியல் பிரதிநிதிகள் கொழும்பில் உள்ள இங்கிலாந்து உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் புத்தகத்தில் கையொப்பமிட்டு தமது அஞ்சலியையும் அனுதாபத்தையும் செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை மாலை தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா கொழும்பில் உள்ள இங்கிலாந்து உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் புத்தகத்தில் கையொப்பமிட்டு தனது அஞ்சலியையும் அனுதாபத்தையும் செலுத்தியுள்ளார். (ம-7)

## சிறுவர் பூங்கா திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் மானிப்பாய் பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மானிப்பாய் சிறுவர் பூங்கா திறப்பு விழா நாளை சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு மானிப்பாய் சிறுவர் பூங்காவில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்., கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்தன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட முன்னாள் மாவட்ட செயலர் நா.வேதநாயகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

## அமைச்சுப் பதவி கிடைத்தால் ஏற்பேன்-நாமல் தெரிவிப்பு

(கொழும்பு)

"அமைச்சுப் பதவி கிடைத்தால் நான் அதை மனதார ஏற்றுக்கொள்வேன். ராஜபக்ஷ குடும்பத்தில் எவரும் இனிமேல் அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்க முடியாது என்று எந்தச் சட்டத்திலும் இல்லை." என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களையடுத்து ராஜபக்ஷ குடும்பத்தினர் அனைவரும் அமைச்சுப் பதவிகளிலிருந்து ஏப்ரல் மாதம் விலகினர். மே மாதம் 9ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷவும், ஜூன் மாதம் 9ஆம் திகதி கோட்டாபய ராஜபக்ஷவும் முறையே பிரதமர் மற்றும் ஜனாதிபதி பதவிகளிலிருந்து விலகினர்.

பதவி விலகி நாட்டை விட்டுத் தப்பியோடிய கோட்டாபய மீண்டும் நாடு திரும்பியுள்ள நிலையில் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டபோது ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த சசீந்திர ராஜபக்ஷவுக்கு பதவி வழங்கப்பட்டது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் மேலும் சிலருக்கு வழங்கப்படவுள்ளன எனவும் அதில் நாமல் ராஜபக்ஷவும் உள்ளடக்கப்பட்டுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையிலேயே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது. "எனக்கு எந்த அமைச்சுப் பதவி பொருத்தம் என்பதை ஜனாதிபதி தான் தீர்மானிக்க வேண்டும். அது தொடர்பில் நான் தீர்மானிக்க முடியாது. நான் மக்களால் தேர்ந்தெடுத்த பிரதிநிதி. எனவே, மீளவும் அமைச்சுப் பதவி கிடைத்தால் அதனூடாக மூவின மக்களுக்கும் மென்மேலும் சேவையாற்றுவேன்" என தெரிவித்தார். (நி)

## மதிப்பளித்தல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உலக சமாதான தினத்தை முன்னிட்டு இலங்கை பல்சயம கருத்தாடல் நிலையச் சகவாழ்வுச் சங்கத்தின் ஏற்பாட்டில் 25 மாவட்டங்களில் ஒருவர் வீதம் சமாதானம், சமூக பணிகளில் ஈடுபட்டவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு யாழ்.பொதுசன நூலகத்தில் நாளை 17 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். இந்திய துணைத்தூதுவர் ராகேஸ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் மற்றும் யாழ். அரச அதிபர் க.மகேசன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (4)

## 18 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் உதவியுடன் 18 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு போசணையான மதிய உணவை வழங்க விவசாய அமைச்சு திட்டமிட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் உணவுப் பற்றாக்குறை என்பன பாடசாலை மாணவர்களின் போசாக்கிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதால், ஆரம்பக் கல்வி பயிலும் குழந்தைகளின் போஷாக்கை உறுதிப்படுத்தும் வகையில் உணவு வழங்கப்படுவதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு 27 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களின் ஒருவேளை போசணையான உணவுக்காக நாளொன்றுக்கு 82 மெற்றிக் தொன் அரிசி தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளதாகவும் இந்த அரிசியை சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-7)

## மஹிந்திரா ஐடியல் பினான்ஸ் சுன்னாக கிளையின் ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

மஹிந்திரா ஐடியில் பினான்ஸ் சுன்னாக கிளையின் 1ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.15 மணிக்கு 100 பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகீழ்வு கிளையின் முகாமையாளர் த.சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக க.சுகந்தன், வாடிக்கையாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளி சிறார்கள் மற்றும் எமது உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

## கட்டுரைப் போட்டி

(கொழும்பு)

சர்வதேச சிங்க சமாஜங்களின் இணையம்-பிராந்தியம் 306 ஏ 02, வருடந்தோறும் நடத்தும் போதைவஸ்து சம்பந்தமான நாடளாவிய ரீதியான கட்டுரைப் போட்டியை இந்த வருடமும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் 15 வயது தொடக்கம் 19 வயதிற்குட்பட்ட சகல பாடசாலை மாணவ மாணவிகளும் பங்கேற்கலாம்.

ஆக்கங்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

போட்டிக்கான தலைப்பு "போதைப்பொருள் பாவனையற்ற வாழ்க்கை முறைமையை கட்டியெழுப்புவதில் இளம் சமுதாயத்தின் பங்களிப்பு" ஆகும்.

கட்டுரைகள் யாவும் பிராந்திய தலைவர் (போதைவஸ்து துஷ்பிரயோகம், எச்.ஐ.வி/எய்ட்ஸ் தடுத்தல்) சர்வதேச சிங்க சமாஜங்களின் இணையம், பிராந்தியம் 306ஏ 2, 12/3, பிரான்சிஸ் வீதி, வெள்ளவத்தை கொழும்பு-06 எனும் முகவரிக்கு 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதிக்கு (2022.10.31) முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.


கட்டுரைகள் A4 அளவு தாளில் 5 பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.(தட்டச்சு பிரதிகளாயின் 4 பக்கங்கள்). தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்படல் வேண்டும்.

அத்துடன் அவை போட்டியாளரின் சொந்த ஆக்கம் எனவும் அவருடைய பெயர், பிறந்த திகதி, வகுப்பு ஆகிய விபரங்களும் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தபட்டிருக்க வேண்டும்.

பங்குபற்றும் மாணவ, மாணவிகள் தங்களது பெயரையும் பாடசாலைப் பெயரையும், சொந்த விலாசத்தையும் ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அத்துடன் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிடல் நன்று என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி உழவனூர் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் நேற்று முன்தினம் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 137.5 லீற்றர் கசிப்பும் 195 லீற்றர் கோடாவும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (4-60-316)



ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 35 ஆவது நினைவு தினம், நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் அனுஷ்டிக்கப்பட்ட இந்த நினைவேந்தலில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர்கள் எனப் பலரும் உணர்வு பூர்வமாக கலந்துகொண்டனர்.

(படம்:சிவசாந்தன், ரவிசாந், கஜிந்தன்)

# கேள்வி அறிவித்தல் - நல்லூர் பிரதேச சபை
## சபைநிதி வேலைத்திட்டம்-2022 (கட்டம் II)

1. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி மற்றும் வடிகால் வேலைகளுக்காக கோருகின்றார்.

2. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆம் திகதி 04/2016 (11) ஆம் இலக்க பொது சுற்றறிக்கை 3.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பிராந்திய விருப்பம் மற்றும் CIDA தர முன்னுரிமைகள் பொருந்தும்.

3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

4. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது. .

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **'தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி , கொக்குவில்'** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - **021-222-2700, 021-3142841**) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை **தலைவர், பெறுகைக்குழு நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரியில் 2022.09.16 ஆம் திகதியிலிருந்து 2022.09.27 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 15.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு 2022.09.28 ஆம் திகதி **மு.ப 10.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

8. கேள்வி பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

9. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2022.09.23 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் **மு. ப. 10.30** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| இல | தொடர்பு இலக்கம் | வேலை விபரம், ஒப்பந்த இலக்கம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1. | NPS/CF-1I/ 2022/01 | நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் அமைந்துள்ள வெள்ளநீர் வடிந்தோடும் வாய்க்கால்களின் உட்புறமும், ஒதுக்கீட்டு பகுதிகளிலும் உள்ள பற்றைகளை வெட்டி துப்பரவு செய்தலும், வாய்க்காலின் உட்பகுதியிலும் கொங்கிறீட் பாலங்கள், கியூம் பைப் பாலங்களின் (Hume Pipe Culverts) உட்புறம் அடைபட்டுள்ள வண்டல் மணல்களை எமது தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிவுறுத்தலின் படி அப்புறப்படுத்தி வெள்ளநீர் வடிந்தோடும் மட்டத்திற்கு வாய்க்காலின் செப்பனிடலும், அகற்றப்படும் பற்றைகள், வண்டல் மண் போன்றவற்றை சபையினால் அடையாளப்படுத்தப்படுமிடத்தில் கொண்டு சேர்த்தலும். | 0.55 | 30 நாட்கள் | C9/C8 | 49 நாட்கள் | 11,000.00 | 2022.12.13 |
| 2. | NPS/CF-1I/ 2022/01 | கோண்டாவில் M.S ஒழுங்கை தொடக்கம் புகையிரத கடவை வரையுள்ள வெள்ளவாய்க்காலில் கொங்கிறீற் பைப் இலான பாலங்களை அமைத்தல். (12 Nos) | 1.59 | 90 நாட்கள் | C9/C8 | 49 நாட்கள் | 24,000.00 | 2022.12.13 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.**

**16.09.2022**

(c-4916)

# வவுனியாவில் திருடப்பட்ட 9 சைக்கிள்கள் மீட்பு
## 4 சந்தேக நபர்கள் கைது

(நெளுக்குளம்)

வவுனியாவில் பல்வேறு பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டபோது திருடிச் செல்லப்பட்ட ஒன்பது துவிச்சக்கர வண்டிகள் நேற்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளதாக நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

வவுனியா மருத்துவமனைக்கு முன்பாகவும் நகர்ப்பகுதிகளிலும் பொது மக்களினால் நிறுத்தி வைக்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகள் பல திருட்டுப் போயுள்ளதாக கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைவாக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது ஒன்பது துவிச்சக்கர வண்டிகள் மீட்கப்பட்டன.

இச்சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளதாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நால்வரில் இருவர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர் கள் துவிச்சக்கர வண்டிகளைத் திருடி விற்பனையில் ஈடுபட்டுள்ளது விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

இச்சம்பவங்கள் குறித்து மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (4-299)

# கருங்குளவிக் கொட்டுக்கு இலக்கானவர் மருத்துவமனையில்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட பளை பகுதியில் கருங்குளவி கொட்டுக்கு ஊடகவியலாளர் ஒருவர் இலக்காகியுள்ளார்.

பளை பகுதியில் ஏ9வீதி ஊடாக குறித்த ஊடகவியலாளர் செய்தி சேகரிப்பு ஒன்றிற்காக மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருந்த வேளை வீதியில் திடீரென தலைக்கவசத்திற்குள் பறந்து வந்த கருங்குளவியே அவரை தாக்கியுள்ளது.

பாதிப்புக்குள்ளான குறித்த ஊடகவியலாளர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-316)

# நினைவேந்தல் நிகழ்வுகளில் அரசியல் செய்யாதீர்கள்
## மாவீரர்களின் பெற்றோர் சார்பில் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நினைவேந்தல் நிகழ்வுகளில் கட்சி அரசியலை கலந்து அவற்றின் புனிதத்தை மாசுபடுத்த வேண்டாம் என அனைத்து மாவீரர்களின் பெற்றோர் சார்பிலும் அறிவிலியின் தந்தையான முத்துக்குமார் மனோகர் அறிக்கை ஒன்றின் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார்.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமான வேளை அங்கு வந்திருந்த அரசியல் கட்சி ஒன்றினை சார்ந்தவர்கள் பிற கட்சியினருடன் முரண்பாடுகளை ஏற்படுத்தும்முகமாக செயற்பாடுகளில் ஈடுபட்டதுடன், அங்கிருந்தவர்களுடன் வாய்த்தர்க்கத்திலும் ஈடுபட்டனர்.

அந்நிலையில் அது தொடர்பில் அனைத்து மாவீரர்களின் பெற்றோர் சார்பிலும் அறிவிலியின் தந்தையான முத்துக்குமார் மனோகர் ஊடக அறிக்கை ஒன்றினை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தியாக திலீபனின் நினைவேந்தல் மட்டுமல்ல எந்த நினைவேந்தல்களிலும் கட்சி அரசியலை கலந்து அவற்றின் புனிதத்தை மாசுபடுத்த வேண்டாம்.

இவ்வாண்டு திலீபனின் நினைவு நிறைவடையும் வரைக்கும் அரசியலை கலக்காமல் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மன்றாட்டமாக அனைத்து கட்சிகளையும் கேட்டுக்கொள்கிறேன். எமது உணர்வுகளை எதிர்காலத்தில் மதிப்பார்கள் என நம்புகிறேன் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை...

அன்றைய தினம் நாட்டில் தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதற்கமைய, குறித்த தினத்தில் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## எரிபொருள்...

யாகியுள்ளன.

இந்த மூன்று கப்பல்களுக்குமான முழுமையான பணத்தை செலுத்தினால் மாத்திரமே கப்பல்களில் இருந்தும் எரிபொருளை இறக்க முடியும் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை இக்கப்பல்களில் விமானங்களுக்கு தேவையான எரிபொருளும் இருப்பதாகக் கூறப்படுகிறது. (ம-7)

## ஒத்திவைக்க...

ளார்.

கல்வி அமைச்சில் நேற்றைய தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இதனைத் தெரிவித்தார்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையினை ஒத்திவைக்குமாறு அரசியல்வாதிகள் கோரிக்கை விடுப்பதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (ம-7)

## இலங்கைக்கு...

வித்துள்ளது.

ரொய்ட்டர்ஸ் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான பணியாளர் மட்ட இணக்கத்துக்கு பின்னர், இலங்கையின் பாதிக்கப்பட்ட பொருளாதாரம் ஸ்திரமாகி வருகிறது.

எனவே இதுவரை வழங்கப்பட்ட 4 பில்லியன் டொலர்களுக்கு மேலதிகமாக இலங்கைக்கு புதிய நிதி உதவியை வழங்க இந்தியா திட்டமிடவில்லை என்று இந்திய தரப்பு குறிப்பிட்டுள்ளது.

இந்த வருடத்துக்குள் இலங்கைக்கு, இந்தியா 4 பில்லியன் டொலர்களை நிதியுதவியாக வழங்கியது.

இதேவேளை இந்தியா, மேலதிகமாக நிதிகளை வழங்கப்போவதில்லை என்ற முடிவு தொடர்பில் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று இலங்கை தரப்பு தெரிவித்துள்ளது. (ம-7)

## சில மாதங்களில்...

தேசிய பாதுகாப்பு கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முப்பது வருடகால யுத்தத்தை இலங்கை வெற்றியுடன் முடிவுக்குக் கொண்டு வந்த நிலையில், தேசிய பிரச்சினைக்கான தீர்வுக்காக, தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இன்னும் சில மாதங்களில் தீர்வு காணப்படும் என நம்புவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.(ம-7)

## ஐ.நாவில்...

வில் இலங்கை தொடர்பான புதிய தீர்மானம் இம்மாத இறுதியில் நிறைவேற்றப்பட உள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த அமர்வில் பங்கேற்கும் இலங்கை பிரதிநிதிகள் இந்த தீர்மானத்தை நிறைவேற்றுவதை தடுக்கும் வகையில் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளின் வாக்குகளை பெற முயற்சிப்பதாக வெளிநாட்டு ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, கனடா, மலாவி, வடக்கு மசிடோனியா மற்றும் மொன்டநீக்ரோ ஆகிய நாடுகளின் அனுசரணையின் கீழ் முன்வைக்கப்படவுள்ள பிரேரணைக்கு பல நாடுகளின் ஆதரவும் கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

இலங்கையில் சர்வதேச அதிகார வரம்பை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான சட்ட மற்றும் பிற வழிகாட்டுதல்களை வழங்குவது மற்றும் சர்வதேச சட்டத்தை மீறி குற்றம் செய்ததற்கான தெளிவான சாட்சியங்களைக் கொண்ட நபர்களுக்குத் தண்டனை வழங்குவது குறித்து தீர்மானம் கவனம் செலுத்துகிறது.

இலங்கையில் மனித உரிமைகள் பலவீனமடைவதற்கு காரணமான பொருளாதாரக் குற்றங்களைச் செய்த அரச உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இந்த வரைவுத் தீர்மானங்கள் பரிந்துரைக்கின்றன. (ம-7)

## புதிய தேர்தல்...

பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்நாட்டு மக்கள் மனதில் பொது மக்கள் போராட்டமொன்று எழுந்தது மக்களை ஒடுக்கும் அரசை விரட்டியடித்துவிட்டு ஜனநாயக அரசை ஸ்தாபிப்பதாக இருந்தாலும், நாட்டின் பொருளாதாரக் கொலையாளியான பிரிவினர்களின் தயவில் அவர்களைப் பாதுகாக்கக்கூடிய ஒருவரையே ஜனாதிபதி நாற்காலியில் அமர வைத்துள்ளனர்.

அவர் கூட தற்போது ராஜபக்ஷ குடும்பத்தின் பிணைக்கைதியாக மாறியுள்ளார்."

"மக்கள் போராட்டத்தைத் தாக்கியதால் பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷ் விலகினார். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கூட தேர்தல் காலத்தில் தாக்குதல்களையும் வன்முறைகளையுமே மகிந்த தரப்பினர் மேற்கொண்டனர்.

ஐ.தே.க.காரர்களைத் தாக்கியவர்களுக்கும்ஐ.தே.க. உறுப்பினர்களைக் கொன்றவர்களுக்கும்கூட தற்போதைய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க அமைச்சுப் பதவிகளை வழங்கியுள்ளார் என்றார். (ம-7)

## வல்ல...

பிடக்கூடாது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

"துரதிர்ஷ்டவசமாக, இந்து சமுத்திரத்தில் நிலவும் புவிசார் அரசியல் நிலைமை அம்பாந்தோட்டை துறைமுகத்தை மோதலுக்கு கொண்டு வந்துள்ளது. இந்தியப் பெருங்கடலில் சீனாவால் இயக்கப்படும் 17 துறைமுகங்கள் உள்ளன.

அவை பல்வேறு நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன, அவற்றில் சில டுபாய் உலக துறைமுக நிறுவனத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இவை அனைத்தும் வர்த்தக துறைமுகங்களாகும். அம்பாந்தோட்டையும் இதேபோன்ற வர்த்தகத்துறை முகமாகும்.

இது போர் துறைமுகம் அல்ல. பாதுகாப்பு முக்கியம். அவுஸ்திரேலியாவின் டார்வின் துறைமுகம் அந்த வகையாக இருக்கலாம். ஏனென்றால், அவுஸ்திரேலிய மற்றும் அமெரிக்க இராணுவப் பயிற்சிக்காக பயன்படுத்தப்படும் துறைமுகங்கள் சீனத் துறைமுகங்களுக்கு எதிரே செயற்படுகின்றன.


எங்களுக்கு அப்படி ஒரு நிலை இல்லை. யாரும் இங்கு வந்து பயிற்சி எடுக்க அனுமதிப்பதில்லை என்றார்.(ம-7)

## உண்ணாவிரத...

ஒருவர் சுகவீனமுற்று சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தம்மை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி 13 கைதிகள் கடந்த 6ஆம் திகதி முதல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களில் சுகவீனமுற்ற ஒருவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆணையாளரும் ஊடகப்பேச்சாளருமான சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். (ம-7)





































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரம் 8.4 வீதமாக சுருங்கியுள்ளது

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் வருடாந்தம் 8.4 வீதமாக சுருங்கியுள்ளது. இதனை தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, விவசாயம் 8.4 சதவீதமும், தொழில்துறை 10 சதவீதமும், சேவைகள் 2.2 சதவீதமும் சுருங்கியுள்ளன.

மின்சார துண்டிப்பு, எரிபொருள் தட்டுப்பாடு, இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் பற்றாக்குறை, உரம் மற்றும் பயணிகள் போக்குவரத்தில் ஏற்படும் இடையூறுகள் ஆகியவை பொருளாதாரத்தை பாதித்துள்ளதாக புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வேளாண்மையில், பயிர்ச்செய்கை ஓராண்டுக்கு முன் இதே காலாண்டுடன் ஒப்பிடுகையில், 32.3 சதவீதம் சரிந்துள்ளது, இதில் தேயிலை 19.7 சதவீதம், நெல் 15.6 சதவீதம், கடல் மீன்பிடி 15.3 சதவீதம், இறப்பர் 13.7 சதவீதம், கால்நடை உற்பத்தி 13.6 சதவீதம், காய்கறிகள் 13.2 என்ற வீதத்தில் குறைந்துள்ளன. (ம-7)

## 13 ஆவது திருத்...

என இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதி ஊடாக இலங்கைக்கு கடுமையான அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு எதிராக இம்முறை புதிய பிரேரணை கொண்டு வரப்படுமாயின் அதனை அரசாங்கம் மாத்திரமல்ல,சகல எதிர்க் கட்சிகளும் நிபந்தனையின்றிய வகையில் கண்டிக்க வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமைகள் ஆணையாளரின் 46.1 பிரேரணையின் பரிந்துரைகளை நிராகரித்த இலங்கை பிரதிநிதிகள் இலங்கையின் பொருளாதார பாதிப்பு தொடர்பான குற்றச்சாட்டுக்களை எதிர்க்கவில்லை எனவும் சுட்டிக்காட்டி விமல் வீரவன்ஸ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,இலங்கையின் இராணுவ பாதுகாப்பு பிரதானிகளுக்கு எதிரான யுத்த குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு சர்வதேச நீதிமன்றத்தின் அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும் என்ற பரிந்துரையை முன்வைத்து சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் 51ஆவது கூட்டத் தொடரில் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்ட 46.1 என்ற யோசனை ஊடாக நிறுவப்படும் போர் குற்றச்சாட்டுக்கள் மற்றும் சாட்சி திரட்டலுக்காக சர்வதேச மட்டத்தில் பொறிமுறை இணைத்துக் கொள்ளப்படும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். சர்வதேச நீதிமன்றத்தின் அதிகாரத்தை பயன்படுத்தி இலங்கையின் இராணுவ பிரதானிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் நாடுகளுக்கு உத்தியோகப்பூர்வமாக சாட்சியங்களை வழங்குவதுடன்,அதனை சர்வதேச நீதிமன்றுக்கு வழங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் 51ஆவது கூட்டத்தொடரில் இலங்கை சார்பில் கலந்துக்கொண்ட பிரதிநிதிகள் ஆணையாளரின் அறிக்கைக்கு எதிராக கருத்துரைத்துள்ளனர். குறிப்பாக இம்முறை முன்வைக்கப்பட்ட பொருளாதார பாதிப்பு தொடர்பாக ஆணையாளர் முன்வைத்த குற்றச்சாட்டுக்களுக்கு இலங்கையின் பிரதிநிதிகள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

இராணுவத்தினர் தரப்பிலான நியாயத்தை எடுத்துரைக்க விசேட வாய்ப்பு கோரப்படவில்லை. 2015ஆம் ஆண்டு முதல் மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைக்கப்படும் போர் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும், இராணுவ தரப்பினரது நியாயத்தை எடுத்துரைப்பதற்கும் சர்வதேச மனித உரிமைகள் ஆணைக் குழுவில் வாய்ப்பளிக்கப்படவில்லை.

விசேடமாக சர்வதேசத்தினால் அங்கீகரிக்கப்பட்ட போர் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான 5 விசேட நிபுணர்களினால் தயாரிக்கப்பட்ட 6 அறிக்கைக்கமைய இலங்கையின் பாதுகாப்பு, இராணுவத்தினர் போர் குற்றங்களில் ஈடுபடவில்லை. என ஆதாரபூர்வமாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அது குறித்து அவதானம் செலுத்தாமலிருப்பது ஆச்சரியத்திற்குரியது. இதற்கு மேலதிகமாக 51ஆவது கூட்டத்தொடரில் கலந்து கொண்ட இந்திய அரசாங்கத்தின் வதிவிட பிரதிநிதி தமிழ் சமூகம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளார். மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என இலங்கைக்கு கடுமையான அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் 30.1 மற்றும் 40.1 ஆகிய யோசனைகளை நிராகரித்துள்ள நிலையில் அதற்கு அழுத்தம் பிரயோகிக்கும் வகையில் இந்தியா அரசாங்கத்தின் பிரதிநிதி அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான பின்னணியில் இலங்கைக்கு எதிராக 50.1 யோசனையை சமர்ப்பிக்குமாயின் அதற்கு அழுத்தம் பிரயோகிப்பதற்கு இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதி அவ்வாறான கருத்தை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவில் புதிதாக ஒரு பிரேரணை முன்வைக்கப்படுமாயின் அதனை அரசாங்கம் மற்றும் அனைத்து எதிர்க்கட்சிகளும் நிபந்தனையின்றிய வகையில் கண்டிக்க வேண்டும். (ம-7)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
17.09.2022
வங்கியியல் கற்கைநெறிகள்
Banking Courses
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification:- G.C.E O/L
6 Passes with 5
Credits including Maths.
கணக்காளர் கற்கைநெறிகள்
Chartered Accounting Courses
Business level - I, II
(Tamil & English Medium)
Qualification:- G.C.E A/L 3 Passes.
தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
AA1, AA2, AA3)
Qualification:- G.C.E O/L 6 Passes
Medium - Tamil & English
G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்
Certificate Course in English
20 Batches have successfully Completed the Course
Further Details: Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382, 021 222 9149
077 440 5917 (C-4919)

இலவச விசா வாய்ப்பு
அமெரிக்க லொத்தர் விசா
அமெரிக்கா செல்ல பாஸ்போட் எடுத்துவிட்டீர்களா? (C-4881)
!!!அலட்சியம் வேண்டாம்!!! October 05 பதிவு ஆரம்பம்
18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம் குடும்பத்தினருக்கு இரண்டு வாய்ப்புக்கள்|PASSPORT அவசியம்.
எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்காவில் நூற்றுக்கணக்கானோர் வாழ்கின்றனர்
V2 TRAVELS 0768226244 0768226240

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS (C-4881)
49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

வேலையாட்கள் தேவை
எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள மேசன், கூலியாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு (C-4922)
077 777 0969

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4881)
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777

சாரதி தேவை
Forklift அனுபவமுள்ள சாரதி
பகுதி நேர வேலை
அடிப்படையில் தேவை.
உடன் தொடர்புகொள்ளவும்.
076 097 3121



வேலணை பிரதேச சபை
பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்
வேலணை பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத நாம்பன் கட்டாக்காலி கால்நடையொன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.
இடம் : வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகம்
காலம் : 16.09.2022 வெள்ளிக்கிழமை மு.ப 11.30 மணி
• ஏலத்தில் கலந்துகொள்ள விரும்புவோர் குறித்த இடத்தில் உரிய கட்டணத்தை செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.
• பகிரங்க ஏலத்தில் சித்தியடைவோர் உடனடியாக பணத்தினை செலுத்தி உரிய பட்டியிலிருந்து உரிய அனுமதியுடன் அன்றைய தினமே ஏற்றிச்செல்லல் வேண்டும்.
நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி
தவிசாளர்,
பிரதேச சபை,
வேலணை.
தொடர்புகளுக்கு :
021 221 1505
15.09.2022 (C-4920)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 04 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு
• இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
• கைதடி சந்தியில் இருந்து 750M தூரத்தில்
• A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி
• நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
• குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
• 20 அடி பாதையுடன்
(12790)
076 755 8606

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் புத்தூரில் 72 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு
• இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
• பருத்தித்துறை வீதியில் இருந்து 1½ Km தூரத்தில்
• சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1½ Km தூரத்தில்
• புத்தூர் சந்தியில் இருந்து (பருத்தித்துறை வீதி) மட்டுவில் செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து இரண்டாவது காணி
• 775 இலக்க போக்குவரத்து பேருந்துகள் செல்லும் காபற் வீதி
• நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
• விவசாயம் செய்வதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த காணி
• ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
• 20 அடிப் பாதையுடன்
(12790)
077 658 5999, 076 436 5814, 077 874 8135

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org